

புரட்சிப் **பெரியார் முழக்கம்**

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | நவம்பர் 17, 2022 | புரட்சி 21 | முழக்கம் 44 | விலை: ரூ.3.00

# 10 சதவீத ஒதுக்கீடு: அரசியல் சட்ட மோசடி

*சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கே.சந்துரு, தி ஃபெடரல்.காம் (புதிய தலைமுறையின் ஆங்கில இணைய பதிப்பு) ஊடகத்திற்கு எழுதிய கட்டுரையின் சுருக்கமான மொழிபெயர்ப்பு.*

2024 நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை இந்துக்களை வளைக்கவும், உயர்ஜாதி இந்துக்களின் ஆதரவைப் பெறவும் பாரதிய ஜனதா கட்சிக்கு 2 முக்கியத் தீர்ப்புகள் பயன்படும் என்றே சொல்லலாம். ஒன்று, 2019ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அயோத்தி தீர்ப்பு, மற்றொன்று தற்போது வழங்கப்பட்டுள்ள உயர்ஜாதி ஏழை களுக்கான பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீடு வழக்கின் தீர்ப்பு. அரசியலமைப்பின் 15 மற்றும் 16-வது பிரிவுகள் திருத்தப்பட்டு, பொருளாதார அடிப்படையிலான இட ஒதுக்கீடு 2019ஆம் ஆண்டு ஜனவரியில் கொண்டு வரப்பட்ட போது தென்னிந்தியாவைத் தாண்டி எதிர்ப்புகள் மிகச்சொற்பமே. உச்சநீதிமன்றத்தில் 5 பேர் கொண்ட அமர்வில் 3 பேர் இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாகவும், இருவர் எதிராகவும் தீர்ப்பளித்தனர். இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக தீர்ப்பளித்தவர்களில் நீதிபதி ஜே.பி.பார்திவாலாவும் ஒருவர். இவர் குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது தீர்ப்பு ஒன்றில் சம்மந்தமே இல்லாமல் இடஒதுக்கீட்டிற்கு எதிராக கருத்துக்களை வெளிப்படுத்தியவர்.

### பதவி நீக்கத்தைச் சந்தித்த நீதிபதி

“இந்த நாட்டை அழித்த அல்லது நாட்டைச் சரியான பாதையில் முன்னேற அனுமதிக்காத இரண்டு எது என யாராவது என்னிடம் கேட்டால், அது இடஒதுக்கீடு மற்றும் ஊழல் என்பேன். நாடு சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகள் ஆன பிறகும் யார் ஒருவராக இருந்தாலும் இடஒதுக்கீடு கேட்பது மிகவும் வெட்கக்கேடானது” என்ற தீர்ப்பெழுதிய பார்திவாலா இப்போது பொருளாதார அடிப்படை யிலான இடஒதுக்கீடு செல்லும் என்று தீர்ப்பு எழுதியிருக்கிறார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அவரை பதவி நீக்கம் செய்யக்கோரும் வகையில் உறுப்பினர்களிடம் கையெழுத்து சேகரிக்கத் தொடங்கியவுடன், சர்ச்சைக்குரிய அந்த பத்திகளை தீர்ப்பில் இருந்து நீக்கிவிட்டார். குஜராத் உயர்நீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாக இருந்த அகில் குரேசி, உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படவில்லை, ஆனால் பார்திவாலா நியமிக்கப்பட்டார். உயர் ஜாதி ஏழைகளுக்கான இட ஒதுக்கீட்டை சரி என்று ஒரு நீதிபதி கூடுதலாக தீர்ப்பளித்ததால்தான் ஏற்கப்பட்டுள்ளது. மிக இளைய நீதிபதியான பார்திவாலாவையும் அமர்வில் இணைத்து, அவர்களுக்கு வேண்டிய தீர்ப்பை பெற்றிருக்கிறார்கள்.

இதில் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் ஐந்து நீதிபதிகளும் பொருளாதார அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை எதிர்க்க வில்லை. 10 விழுக்காடு இடஒதுக்கீடு உச்சநீதிமன்றம் இதற்குமுன்பு வழங்கிய 50 விழுக்காடு வரம்பை மீறக்கூடாது என்ற உத்தரவை மீறுகிறது என்றும், எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. பிரிவினர் இந்த இட ஒதுக்கீட்டில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர் என்றும் தான் 2 நீதிபதிகள் எதிர்த்து தீர்ப்பளித்துள்ளனர். சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின் தங்கியவர்களை உயர்த்துவதற்காக, அரசிய லமைப்பின் 15 மற்றும் 16ஆவது பிரிவுகளில் கூறப்பட்டவற்றை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

பழைய மதராஸ் மாகாணமாக இருந்தபோது நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் ஜாதி மற்றம் மத அடிப்படையில் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்கும் நடைமுறை நீண்டகாலமாக இருந்தது. 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகும் இந்த நடைமுறை தொடர்ந்தது. அப்போது மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளுக்கும் இட ஒதுக்கீடு இருந்தது. பார்ப்பனரல்லாத இந்துக்கள், பிற்படுத்தப்பட்ட இந்துக்கள், பார்ப்பனர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், கிறித்தவர்கள், இசுலாமியர்களுக்கு இட ஒதுக்கீடு நடைமுறையில் இருந்தது.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 17.11.2022**

## முன்னாள் நீதிபதி சந்துரு



1950-51 கல்வியாண்டிற்கான மருத்துவம், பொறியியல் மாணவர் சேர்க்கை நடைபெற்றபோது இட ஒதுக்கீட்டால் தங்களுக்கு இடம் மறுக்கப் பட்டதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் 2 பார்ப்பன மாணவர்கள் வழக்கு தொடுத்தனர். அதில் ஒருவரான செம்பகம் துரைராஜன், அரசியலமைப்பு சட்டப் பிரிவு 15(1) ஜாதி அடிப்படையில் பாகுபாடு பார்ப்பதை தடை செய்திருப்பதாகவும், ஜாதி மற்றும் மதத்தின் அடிப்படையில் இல்லாமல் தகுதி அடிப்படையில் மட்டுமே மாணவர் சேர்க்கை இருக்க வேண்டுமென்றும் வாதிட்டார். இந்த வாதங்களை ஏற்று சென்னை உயர்நீதிமன்றம் 1950 ஜூலை 27ஆம் தேதி, மதராஸ் மாகாண அரசின் இடஒதுக்கீடு அரசாணையை ரத்து செய்தது. ஆனால் செம்பகம் துரைராஜன் அப்போது உண்மையில் மருத்துவ படிப்பில் சேருவதற்கு விண்ணப்பிக்கவே இல்லை, அதற்கான வயது வரம்புக்குள்ளும் அவர் அப்போது இல்லை.

உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து மாநில அரசு உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது. தலைமை நீதிபதி ஹீராலால் கானியா தலைமையிலான அமர்வு, சென்னை மாநிலத்தின் இட ஒதுக்கீடு அரசாணை அரசியலமைப்பு சட்டத்தின் 29 (2) ஆவது பிரிவுக்குப் புறம்பானது என்றும், இடஒதுக்கீட்டை ரத்து செய்த சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு செல்லும் என்றும் தீர்ப்பளித்தது. ஏறத்தாழ 17 ஆண்டுகளுக்குப் பிறகு உச்சநீதிமன்றத்தில் மீண்டும் செண்பகம் துரைராஜன் வழக்கு பேசுபொருளானது. “பல நூற்றாண்டுகளாக பாரபட்சம் காட்டப்பட்ட வர்களை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், யாருக்கு எதிராகவும் பாரபட்சம் காட்டுவதாகாது. சட்டப்பிரிவு 16(4) மற்றும் 340 ஆகியவை ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சிறப்பு சலுகைகள் வழங்கியுள்ளன. அவர்களின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை சிறப்பு அக்கறையுடன் அரசு ஊக்குவிக்கலாம் என்று சட்டப்பிரிவு 46 கூறுகிறது. இந்த பிரிவுகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்த எடுக்கப்படும் நடவடிக்கை ஜாதி அடிப்படையிலான பாகுபாட்டை ஏற்படுத்துவதாகக் கொள்ள முடியாது” என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

### வறுமையைக் காட்டிலும் ஜாதியே முதன்மையானது

பிற்படுத்தப்பட்டவர்கள் யார் என்று கண்டறிய கர்நாடக அரசு ஆணையம் ஒன்றை அமைத்தது. இதே கேள்வி உச்சநீதிமன்றத்திலும் எழுந்தபோது, நீதிபதி ஓ.சின்னப்பரெட்டி ஜாதி மற்றும் வர்க்கத்திற்கு இடையிலான தொடர்பை விளக்கினார். “இந்திய கிராமப்புற சமூகத்தில் சமூக நிலையும், பொருளாதார வலிமையும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளன. வறுமையைக் காட்டிலும் ஜாதியே முதன்மையானது என்று தயங்காமல் சொல்லலாம். ஒரு நபரின் சாதியைக் குறிப்பதன் மூலம் சமூகப் பின்தங்கிய நிலையை பெரும்பாலும் எளிதில் அடையாளம் காணக்கூடியதாக இருக்கிறது. வறுமை, சாதி, தொழில் மற்றும் குடியிருப்பு ஆகியவை சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினராக ஒருவர் இருக்க பங்களிக்கும் முக்கிய காரணிகள்” என்றார் அவர்.

மண்டல் கமிசன் அறிக்கையின்படி, சமூக மற்றும் கல்வி ரீதியாக பின் தங்கியவர்களுக்கு 1990-களில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டபோது, பாஜகவும், அதன் இளைஞர் மற்றும் மாணவர் பிரிவும் நாடு தழுவிய போராட்டத்தைத் தொடங்கி, மிகப்பெரிய வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டன. இடஒதுக்கீடு தகுதி திறமைக்கு எதிரானது என்றும், இடஒதுக்கீடு இல்லாத வகுப்பினருக்கு சம உரிமை மறுக்கப்படுவதாகவும் எதிர்த்தனர். அப்போது இட ஒதுக்கீடு வழக்கு மீண்டும் உச்சநீதிமன்றத்திற்கு வந்தது. 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு 1992-ஆம் ஆண்டில் வழங்கிய தீர்ப்பில், சமூக மற்றும் கல்வி ரீதியாக இட ஒதுக்கீட்டை ஏற்றது. கிரிமீலேயர் கூடாது என்றும் விலக்கியது. பொருளாதார ரீதியில் பின்தங்கியோருக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிப்பது அரசியல் சாசன விரோதம் என உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது. அரசியல் சாசனம் அதை அனுமதிக்கவில்லையென்பதோடு, இட ஒதுக்கீடு என்பது வரலாற்று ரீதியில் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களை மேம்படுத்துவதற்கான வழியே தவிர, வறுமையை போக்குவதற்கான திட்டமல்ல என்றும் குறிப்பிட்டது. அதே சமயம் இட ஒதுக்கீடு 50 விழுக்காடு வரம்பை மீறக்கூடாது என்றும் உத்தரவிட்டது.

இந்தத் தீர்ப்புக்குப் பிறகு இட ஒதுக்கீடு தொடர்பாக 2 முறை சட்டத் திருத்தம் செய்யப்பட்டன. 1995இல் செய்யப்பட்ட 77ஆவது சட்டத்திருத்தம் உயர்கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு அளித்தது. 2005ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 93ஆவது சட்டத்திருத்தம் அரசுப் பணிகளில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு பதவி உயர்வில் இட ஒதுக்கீடு அளிக்க வழிவகை செய்தது. இவற்றை உச்சநீதிமன்றம் உறுதி செய்தாலும், எஸ்.சி., எஸ்.டி. பிரிவு ஊழியரின் பின்தங்கிய நிலை, அரசுப் பணி பதவி உயர்வுகளில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு போதிய வாய்ப்பு இல்லாமை, சம்பந்தப்பட்ட ஊழியரின் பணித் திறமை ஆகியவற்றை கணக்கில் கொண்டு இட ஒதுக்கீட்டை அளிக்கலாம் என்றும் 2006ஆம் ஆண்டில் கூறியிருந்தது. பல மாநில அரசுகள் இதனை செயல்படுத்த முயன்றபோது எதிர்ப்புகள் கிளம்பின. இதுதொடர்பாக தரவுகளை சேகரிக்க உத்தரகாண்ட் அரசு ஒரு குழுவை நியமித்தது. அக்குழு எஸ்சி/எஸ்டி பிரிவினருக்கு பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்க பரிந்துரைத்த போதும் மாநில அரசு அதை செயல்படுத்த மறுத்தது. இதுதொடர்பான மேல்முறையீட்டில், பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், நீதிமன்றங்கள் அவ்வாறு வழங்குமாறு மாநில அரசுகளை கட்டாயப்படுத்தாது என்றும் 2020இல் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த உத்தரவால் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்குவதில் உறுதியான நடவடிக்கையை எதிர்பார்ப்பது கானல் நீரானது. அதேபோல பொதுத்துறை நிறுவனங்கள் அரசின் வசம் இருக்கும்போது அவற்றில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டியது அரசியலமைப்புச் சட்டம் 12 இன் கீழ் கட்டாயமாகிறது. **ஆனால் தனியார்மயம், தாராளமயம் என்ற பெயரில் பொதுத்துறை நிறுவனங்களில் இருந்து முதலீடுகளை திரும்பப் பெறுவதன் மூலம் சமூக மற்றும் கல்வி ரீதியாக பின் தங்கியவர்களுக்கு கொடுக்கப்படும் இட ஒதுக்கீடு படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது.**

பிரதமர் மோடி தலைமையிலான பாஜகவின் முதல் ஐந்தாண்டு ஆட்சிக்காலம் நிறைவின்போது, திடீரென 103-வது சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கான மசோதாவை நிறைவேற்றினார்கள். இது 2019 நாடாளுமன்ற தேர்தலுக்கு பெரிதும் உதவும் என்று பாஜக நினைத்தது. 10 விழுக்காடு இட ஒதுக்கீடு உச்சநீதி மன்றம் உத்தரவிட்ட 50 விழுக்காடு என்ற அளவுகோலை மீறும் என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. எஸ்.சி., எஸ்.டி. இட ஒதுக்கீடு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையில் ஒதுக்கப்பட்டது. ஆனால் ஓ.பி.சி. இட ஒதுக்கீடு மக்கள் தொகை எண்ணிக்கை ஏற்ப இல்லாமல், 27 விழுக்காடாக குறைக்கப்பட்டது. ஆனால் உயர்ஜாதி ஏழைகளுக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு எந்த அடிப்படையில் வந்தது என்பது புரியவில்லை.

### மார்க்சிஸ்ட்டுகள் குழப்பம்

இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினரை இட ஒதுக்கீட்டில் இருந்து விலக்குவதற்கு வைக்கப்பட்ட


(4ஆம் பக்கம்)

# எழுவர் விடுதலை; துணிவுடன் முதலில் களமிறங்கிய வழக்கறிஞர் துரைசாமி

***7 பேர் ‘விடுதலை’யில் துணிந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக வழக்காடி வந்த பெருமை ‘பெரியாரிஸ்ட்’ மூத்த வழக்கறிஞர் துரைசாமி அவர்களுக்கே உண்டு. இதை வரலாற்றில் பதிவு செய்தாக வேண்டும். இது குறித்து வழக்கறிஞர் துரைசாமியின் பங்களிப்பை அவரது ஜூனியர் இளங்கோ முகநூலில் செய்துள்ள பதிவைப் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பெருமையுடன் பதிவு செய்கிறது.***

ராஜீவ் கொலை வழக்கில் யார் யாரையெல்லாம் கைது செய்யப்படுவதிலிருந்து காப்பாற்றினார் வக்கீல் துரைசாமி என்று எத்தனை பேருக்கு தெரியும்? குண்டு வெடித்தவுடன் வழக்கு சிபிஐயின் கைக்கு போய்விட்டது. சிபிஐயினர் காங்கிரஸ் மேலிடத்தை திருப்திப்படுத்த கைது வேட்டையை தொடங்கி விட்டனர். முதலில் ஓ.சுந்தரம், திமுக பிரமுகர், இவர் தான் முதல் காவல். விடுதலைப் புலிகளை ஆதரித்த அரசியல் வாதிகள் கைதுக்கு பயந்து அங்கங்கே பதுங்கிக் கொண்டனர். அவர்களின் வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டது. நிறைய தீ வைப்பு சம்பவங்கள். ஆதரவு அரசியல் கட்சியினர் எவரும் முன்வரவில்லை. சட்டவிரோத காவலில் இருந்த சுந்தரத்தை முதன் முதலில் தைரியமாக ஹேபியஸ் கார்பஸ் மனு தாக்கல் செய்து வெளியே கொண்டு வந்தவர் வக்கீல் துரைசாமி. சிபிஐயினர் தேடித் தேடி ராஜீவ் வழக்கில் கைது நடவடிக்கை மேற்கொண்டனர்.

சட்டப் போராட்டம் நடத்த அப்போது யாருமே முன்வரவில்லை. யாருக்கும் வழக்கை எடுத்து நடத்த தைரியம் இல்லை. பயந்து ஓடி ஒளிந்து கொண்டார்கள். அடுத்தடுத்து கைது செய்யப்பட விருந்த திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ஆவடி மனோகரன், திராவிடர் கழக மாணவரணி அப்போதைய தலைவர் பாலகுரு, செயலாளர் பத்ரி நாராயணன் மற்றும் மிக முக்கிய தலைவரான அன்றைய திராவிடர் கழக அமைப்புச் செயலாளர், தற்போது திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர்கள் கைது செய்யப்பட்டு சிபிஐயினரின் சட்டவிரோத காவலில் அடைத்து வைக்கப்பட்டனர். யாருமே தைரியமாக முன் வராத வேளையில் நீதிமன்றத்தில் ஹேபியஸ் கார்பஸ் மனு தாக்கல்



செய்தும், சிபிஐயின் மல்லிகைக்கே சென்று மிரட்டி அவர்களை வெளியே கொண்டு வந்தது வக்கீல் துரைசாமி. இந்த தைரியம் யாருக்கு வரும். குறிப்பாக கொளத்தூர் மணியை கைது செய்து விட்டனர் சிபிஐ என்று தி ஹிந்து பத்திரிகையில் முதல் பக்கத்தில் செய்தியாக வந்துவிட்டது. சிபிஐ டைரக்டர் கார்த்திகேயனையே மிரட்டி மிஸ்டர் கார்த்திகேயன் நீங்கள் மணியை எந்தவித ஆதாரமும் இல்லாமல் எப்படி கைது செய்ய முடியும் என்று மிரட்டியே கொளத்தூர் மணியை வெளியே கொண்டு வந்தவர்.

பேரறிவாளனுக்கு அவருடைய தாயார் ஹேபியஸ் கார்பஸ் மனு போட அனுமதித்திருந்தால் அப்பொழுதே பேரறிவாளனை இவர் வெளியே கொண்டு வந்திருப்பார். பாவம், அவர் அம்மா சிபிஐயினர் விட்டு விடுவோம் என்று பொய்யாக சொல்லியதை நம்பி விட்டார். ஆரம்ப கட்டத்தில் வக்கீல் துரைசாமி மீது எத்தனை எதிர்ப்புகள் தெரியுமா; எவ்வளவு தாக்குதல்களுக்கு உள்ளானார் என்பதாவது தெரியுமா; இவர் ஆஜராவதைத் தடுக்க வீட்டில் போய் தாக்குதல் நடத்தியது தான் தெரியுமா; தொலைபேசியில் எத்தனை கொலை மிரட்டல்கள். நீதிமன்றத்திற்கு நீ இந்த வழக்கில் ஆஜரானால் உன்னை கொல்லாமல் விட மாட்டோம் என்று எத்தனை கடிதம் அனுப்பியிருப்பார்கள். இவ்வளவு தாக்குதல் களையும் முறியடித்து வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்காக ஆஜராகி தடா நீதிமன்றத்தில் ஏழு வருடமாக விசாரணையில் பங்கு கொண்டு வாதாடி நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை சட்டப் போராட்டம் நடத்தி, உச்ச நீதிமன்றத்தில் வழக்கினை இணைந்து நடத்தி 19 பேர் விடுதலைக்கு உதவியும் இடர்பாடுகள் அனைத்தையும் உடைத்து அன்றைக்கு மிகப் பெரிய சரித்திர சாதனை படைத்தது வழக்கறிஞர் துரைசாமி தான். அப்போது இவ்வளவு மீடியா கிடையாது. அன்றைக்கே இந்த வழக்கிற்கு தடா சட்டம் பொருந்தாது என்று வாதிட்டதன் அடிப்படை தான் இன்றைய எழுவர் விடுதலைக்கு அடித்தளம். இந்த வழக்கிற்கு தடா சட்டம் பொருந்தாது என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பை பெற்றுத் தர அடித்தளமிட்டவரே வழக்கறிஞர் துரைசாமி தான். இவர் எழுதிய நூலான “ராஜீவ் கொலை - மறைக்கப்பட்ட உண்மைகள்” நூலைப் படியுங்கள். பல மர்மங்கள் உடையும். ஆனால் இந்த அறுவர் விடுதலையில் இவரை ஏன் இன்றைக்கு மறந்து விட்டோம்?

## *நீதிமன்றத்தில் ஒரு பேச்சு; மக்களை ஏமாற்ற வேறு பேச்சு*

# பாஜகவின் இரட்டை வேடம்

**ம.கி. எட்வின் பிரபாகரன்**

*“கிறித்தவ இஸ்லாமிய மதங்களுக்கு மாறிய பட்டியல் சமூக மக்களையும், பட்டியலினத்தவர்களாகவே கருதி, அவர்களுக்கு இடஒதுக்கீட்டு உரிமையை வழங்க வேண்டும்” என்ற கோரிக்கையை வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பே பொதுநல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த பொதுநல மனுக்களுக்கு எதிராக பாஜக அரசு, எதிர் உறுதிச்சான்றை* (Counter Affidavit) *நீதிமன்றத்தில் (09/11/2022) சமர்ப்பித்துள்ளது. அதில் பாஜகவின் இரட்டை வேடம் அம்பலமாகியுள்ளது.*

பாஜக நீதிமன்றத்தில் கூறியவை என்ன?

“பட்டியலின மக்கள் எந்த மதத்துக்கு மாறியிருந்தாலும் அவர்கள் பட்டியலினத்தவராகவே கருதப்பட வேண்டும்” என்கிற நீதியரசர் ரங்கநாத் மிஸ்ரா ஆணையத்தின் அறிக்கையை தவறு என்றும், ஹிந்து மதத்தில் இருக்கும் அளவுக்கான தீண்டாமையோ, மற்ற ஒடுக்குமுறைகளோ கிருத்தவ இஸ்லாமிய மதங்களில் பரவலாக இல்லை என்றும், கிறித்தவமும் இஸ்லாமும் அந்நிய நாட்டு மதங்களாக இருப்பதால் ஜாதி அமைப்பை அம்மதங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும்,

கிறித்தவ இஸ்லாமிய மதம் மாறியவர்களுக்கு, பட்டியல் இன இடஒதுக்கீட்டை வழங்கினால் அவர்களும் ஹிந்து மதத்தில் இருக்கும் பட்டியலினத்தினரை போலவே ஒடுக்குமுறைகளை சந்திக்க வேண்டி வரும் என்றும், சமத்துவ (egalitarian) மதமான கிறித்துவ மதத்தில் ஜாதிக்கு எந்தவித அங்கீகாரமும் இல்லை என்றும், புத்த மதத்துக்கோ, சீக்கிய மதத்துக்கோ மாறிய பட்டியல் இனத்தவர்களின் ஜாதியை இப்போதும் கூட அடையாளம் காண முடியும் என்றும், ஆனால் பல நூற்றாண்டுகளாக கிறித்தவ இஸ்லாமிய மதங்களுக்கு மாறி வருகின்ற பட்டியலினத்தவர்களின் ஜாதியை அடையாளம் காண முடியாது என்றும்,

“இந்து பட்டியலினத்தவர்களைப் போலவே, கிறித்தவத்துக்கும் இஸ்லாமியத்துக்கும் மதம்மாறிய தலித் மக்களும், ஒடுக்குமுறைகளை சந்திக்கிறார்கள் என்பதை நிறுவுவதற்கு, துல்லியமான நம்பகத்தன்மை வாய்ந்த சான்றாவணங்கள் எதுவும் இதுவரை இல்லை” என்றும் கூறியுள்ளது.

பாஜக அரசு மக்களிடம் பாஜக இன்றுவரை செய்யும் பிரச்சாரங்கள் என்னென்ன? நீதிமன்றத்தில் பாஜக தெரிவித்திருக்கும் கருத்துக்களில் இருந்து அவை எவ்வாறு மாறுபடுகின்றன?

“இந்துக்களே தாய் மதம் திரும்புங்கள்” என்று கிறித்தவ இஸ்லாமிய மதங்களுக்கு மாறிய பட்டியல் இனத்தவரையும் சேர்த்தே தான் பாஜக அழைக்கிறது; இந்து முன்னணி வகையறாக்களும் அழைக்கிறார்கள். அவ்வாறாக அழைக்கப்படுபவர்களை ஏதேனும் ஒரு ஜாதியில் சேர்த்து தானே ஆக வேண்டும். கிறித்தவ மதம் மாறியவர்கள் முற்றிலுமாக ஜாதியை கைவிட்டவர்களாக மாறி இருந்தால், “தாய் மதம் திரும்புங்கள்” என்ற இவர்களின் கோரிக்கையை ஏற்று வருபவர்களை எந்த ஜாதியில் பாஜகவினர் சேர்த்துக் கொள்வார்கள்? பார்ப்பனர்களாக ஏற்றுக் கொள்வார்களா?

கிறித்தவ இஸ்லாமிய மதங்களில் தீண்டாமை கொடுமைகள் பரவலாக இல்லை என்று நீதிமன்றத்தில் உறுதியாக கருத்து தெரிவிக்கும் பாஜக அரசு, மக்களிடம் இதே கருத்தை தான் தெரிவிக்கிறதா? “மீண்டும் இந்து மதத்திற்கு திரும்புங்கள்” என்று பட்டியலினத்தவரை நோக்கி கோரிக்கை வைக்கும் பாஜக, என்ன சொல்லி கோரிக்கை வைக்கிறது? “கிறித்தவத்துக்கு நீங்கள் மதம் மாறினாலும், அங்கே ஜாதி உண்டு; இந்து மதத்தை விட கிறித்தவத்தில் ஜாதி வேறுபாடுகள் அதிகமாக உண்டு; இந்து மதத்தில் ஜாதி இல்லை; நாங்கள் ஜாதியை ஒழித்து விட்டோம்; எனவே இந்து மதத்திற்கு வாருங்கள்” என்று தானே பொய் பிரச்சாரம் செய்து ஆட்களை அழைக்கிறது! நீதிமன்றத்தில் இவர்கள் முன்வைக்கும் வாதங்களுக்கும், மக்கள் மன்றத்தில் (மக்களை மதரீதியாக பிரித்து அணி திரட்டி வாக்குகளை சேகரித்து சனாதன தர்மத்தை நிலை நாட்டுவதற்காக) இவர்கள் முன்வைக்கும் பிரச்சார வாதங்களுக்கும் எவ்வளவு வேறுபாடுகள் இருக்கின்றன! இது இரட்டை வேடமல்லவா!

“ஜாதியை உருவாக்கியதே வெள்ளைக்காரன் தான்” என்று தொலைக்காட்சி விவாதங்களில் பல வலதுசாரி சார்புடையோர் பேசுவதை நாம் கேட்டிருப்போம். இதை பாஜகவின் நிலைப்பாடு என்று எடுத்துக் கொள்வதா? அல்லது நீதிமன்றத்தில் “இந்து மதத்தில் தான் ஜாதி உண்டு; அந்நிய மதங்களான கிறுத்தவ இஸ்லாமிய மதங்கள், சாதி அமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை” என்று பாஜக சொன்னதை பாஜகவின் நிலைப்பாடாக எடுத்துக் கொள்வதா? எதை பாஜகவின் நிலைப்பாடாக எடுத்துக் கொள்வது? மக்களிடம் பிரிவினையை தூண்டி வயிறு வளர்க்க, பல கருத்துகளை முன்வைக்கும் பாஜக, நீதிமன்றத்தில் மட்டும் பல்டி அடிப்பது ஏன்?

இந்து பட்டியலினத்தவர்களைப் போலவே கிறித்தவ இஸ்லாமிய பட்டியல் இனத்தவர்களும் தீண்டாமை உள்ளிட்ட ஒடுக்குமுறைகளை எதிர்கொள்கிறார்கள் என்பதை நிறுவுவதற்கு சான்றாதாரங்கள் எதுவும் இல்லை என்று ஒன்றிய அரசு கூறுமேயானால், 2014ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியில் இருக்கும் இந்த ஒன்றிய அரசு, அதற்குரிய சான்றாதாரங்களை இந்த எட்டு ஆண்டுகளாக ஏன் திரட்டவில்லை? என்பதே நம்முடைய கேள்வியாக இருக்கிறது. சான்றாதாரங்களை திரட்டி, மதம்மாறிய பட்டியல் இனத்தவர்களுக்கான உரிமைகளை நிலைநாட்டுவதில் அக்கறை காட்டாத பாஜகவுக்கு, “பட்டியல் இனத்தவர்களே மீண்டும் தாய் மதம்

(3ஆம் பக்கம்)

## “பிராமண” வெறுப்பு வாதத்துக்கு பதிலடி

# உடை–உணவு–வீடு என்ற அடிப்படைக் கட்டமைப்புகளில் ‘பிராமணர்’களின் உற்பத்தி பங்கு என்ன?

இட ஒதுக்கீடு என்பதற்கு மாற்றுப் பெயர் சமூக சமத்துவம் social democracy. அனைவருக்கும் சமத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதே இதன் அடிப்படையான ஒரு கொள்கை. உரிமைகளை, வேலை வாய்ப்புகளை அரசியலை உழைப்பை பகிர்ந்து கொள்ள வேண்டும். 10% இட ஒதுக்கீட்டு ஆதரவாளர்கள் அதை எதிர்ப்பவர்களைப் பார்த்து ‘பிராமண வெறுப்பு அரசியல்’ பேசுவதாக இப்போது புலம்பிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து சில கேள்விகளை நாம் கேட்க வேண்டியிருக்கிறது.

பிராமணர் என்று நீங்கள் சொல்கிற சொல் என்பதே சூத்திரர் என்று ஏனைய மக்களை வெறுக்கின்ற இழிவு படுத்துகின்ற சொல் என்பது உங்களுக்குப் புரியவில்லையா? பிராமணர் என்று ஒரு சாதி இருக்கிறதா? சர்மா இருக்கிறார், சாஸ்திரி இருக்கிறார், அய்யங்கார் இருக்கிறார் ஆனால் பிராமணர் என்று ஒரு சாதி இருக்கிறதா? இந்த சர்மா, சாஸ்திரி, அய்யங்கார் இவர்களையெல்லாம் சேர்த்து வர்ண அடிப்படையில் சூட்டப் பட்டது தான் பிராமணர். ஆனால் வர்ணம் என்ற அடிப்படையில் பிராமணர் என்று நீங்கள் உங்களை கூறிக் கொள்ளுகிறீர்கள் என்று சொன்னால் ஏனைய சாதி மக்களையும் வர்ண அடிப்படையிலேயே சூத்திரர்கள் என்று நீங்கள் அங்கீகரிப்பதாகவே அர்த்தம்.

சூத்திரர்கள் என்றால் பிராமணர் களுடைய அடிமைகள், பிராமணர்களின் இரு பிறப்பாளர் களுக்கு சேவகம் செய்யக் கூடியவர்கள், விலைக்கு வாங்கப்பட்டவர்கள், பிராமணரின் வைப்பாட்டி மக்கள் என்று மனுதர்மம் கூறியிருக்கிறதா ? இல்லையா ? உழைக்கின்ற மக்களை இப்படி சூத்திரர்கள் என்று இழிவுபடுத்தி விட்டு தங்களைப் பிராமணர் என்று சொல்லிக் கொண்டு விட்டு, பிராமணர் என்பதையே தங்கள் வர்ண அடையாளம் ஆக்கிக் கொண்டவர்கள் மற்றவர்களைப் பார்த்து பிராமண வெறுப்பு அரசியல் என்று கூறுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது ? என்ற கேள்விக்கு முதலில் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

மற்றொரு கேள்வியை கேட்க வேண்டும். ஒரு சமூகத்தின் அடிப்படை தேவை என்ன ? மூன்று தேவைகள் இருக்கின்றன. ஒன்று இருப்பதற்கு வீடு, உடுப்பதற்கு உடை, உண்பதற்கு உணவு. இந்த வீடு, உணவு, உடை மூன்று துறைகளிலும் உற்பத்திகளில் எந்த பிராமணராவது ஈடுபட்டு இருக்கிறார்களா ஏன்? ஒரு பிராமணர் கூட வயலில், வேத காலத்தில் இருந்து இந்த நாள் வரை இறங்கி நாற்று நட முன் வரவில்லை ? ஏன் எந்த ஒரு பிராமணரும் கட்டுமானத் தொழிலில் உழைப்புத் தொழிலில் ஈடுபடுவதற்கு முன் வரவில்லை ? எந்த ஒரு பிராமணரும் ஏன் உடைகளை, ஆடைகளை தயாரிக்கும் அந்த உற்பத்தி தொழிலில் தொழிலாளிகளாக, உழைப்பாளிகளாக இன்று வரை முன் வரவில்லை ?

வேத காலத்திற்குப் பிறகு பல்லாயிரம் ஆண்டு காலத்திற்கு பிறகும் பிராமணியம், பிராமணர் தன்னுடைய அடையாளத்தை அப்படியே நிலை நிறுத்திக்கொண்டு உழைக்கின்ற மக்களைப் பார்த்து அவர்கள் சமூக ஜனநாயகத்தை கூறுகின்ற போது நீங்கள் பிராமண வெறுப்பு அரசியலைப் பேசுகிறீர்கள் என்றால் மகா மகா மோசடி, பித்தலாட்டம்.

### “ரிஷிகள் நேரில் வரவேண்டும்”

- ஆளுநர் அமைச்சரவை முடிவுக்கு எல்லாம் பயப்பட மாட்டார். அவருக்கு பாரதத்தை உருவாக்கிய ரிஷிகளும் முனிவர்களும் வந்து கட்டளையிட வேண்டும், அப்போது தான் அவர் பதவி விலகுவார்!
- உயர் ஜாதி ஒதுக்கீட்டில் பிராமணர் களுக்கு கிடைக்கும் இடங்கள் குறித்து அரசிடம் வெள்ளை அறிக்கை கேட்கிறார் வானதி சீனிவாசன்.

  அத்துடன் கொட்டும் மழையில் இரவு பகல் பாராது மழைநீரை அகற்றிக் கொண்டிருக்கும் தொழி லாளர்களில் பிராமணர்கள் எவ்வளவு பேர்? என்ற அறிக்கையையும் கேட்டால் நல்லது.
- கடவுளுக்கு ஆண்டுதோறும் நடத்தும் திருமணம் போலியானது என்று தீட்சதர்கள் நீதிமன்றத்தில் மனு போட்டிருக்கிறார்கள்.

  ஆனால் பக்தர்களை உண்மை என்று நம்ப வைக்கிறார்கள் !

  இதற்குப் பெயர் பக்தி ஆன்மீகம்!

**– விடுதலை இராசேந்திரன் டுவிட்டரிலிருந்து**

## 6 பேர் விடுதலை; தமிழ்நாட்டின் வரலாற்றுக் குறிப்பு நாள்

ராஜீவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 6 பேரையும் 11.11.2022 அன்று உச்ச நீதிமன்றம் விடுதலை செய்துவிட்டது. இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க நாள் என்று தான் கூற வேண்டும். மனித உரிமையாளர்களுக்கு சட்டப் போராட்டத்திற்கு கிடைத்த மகத்தான வெற்றி. உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பின் வழியாக பல செய்திகளை கூறியிருக்கிறது. ஒன்று, பேரறிவாளன் விடுதலைக்கு என்னென்ன காரணங்கள் சொல்லப்பட்டதோ அத்தனை காரணங்களும் ஏனைய 6 பேருக்கும் அப்படியே பொருந்தும் என்பது ஒன்றாகும். இரண்டாவது தமிழக அமைச்சரவையின் முடிவு தான் இறுதியானது. அதை ஆளுநர்கள் கிடப்பில் போடுவதால் தடுத்து விட முடியாது, என்று மாநில உரிமையும் இதில் நிலை நாட்டப்பட்டுள்ளது.

இது ஆளுநர் சண்டித்தனத்திற்கு கிடைத்த சரியான ஒரு பதிலடி. மூன்று, தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எழுவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்பது தான். ஏற்கனவே பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டு விட்டார். எனவே அமைச்சரவையின் முடிவும் தி.மு.க. ஆட்சி தொடர்ந்த வழக்கும் ஏழு பேருக்கும் தான் என்பதால் ஏனைய 6 பேருக்கும் அது பொருந்தக்கூடியது தான் என்று உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. மற்றொன்று அன்றைய தினம் வழக்கு விசாரணைக்கு வராது என்று ஒன்றிய அரசினுடைய வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்கே வரவில்லை. நீதி மன்றத்திற்கு ஒன்றிய அரசின் வழக்கறிஞர்கள் வராத நிலையிலும் ஒன்றிய அரசு இவர்களை விடுதலையை மறுத்த நிலையிலும் அந்த கருத்துக்களை முற்றாக புறம் தள்ளிவிட்டு உச்சநீதிமன்றம் இந்த 6 பேரையும் விடுதலை செய்து இருக்கிறது.

இறுதியாக நாம் சுட்டிக்காட்டுவது பேரறிவாளன் தனக்கான விடுதலை மட்டும் மனு போட்ட போது ஒரு விமர்சனம் வைக்கப்பட்டது. ஏன் அனைவருக்குமான விடுதலைக்காக சேர்த்து போராடவில்லை என்பதே அந்த விமர்சனம். அப்போது பேரறிவாளன் சார்பில் முன்வைக்கப்பட்ட கருத்து பேரறிவாளன் விடுதலைக்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருக்கிற காரணத்தினால் அதை காரணம் காட்டி அவர் விடுதலை பெற்று விட்டால் அதை வைத்து 6 பேர் விடுதலையை எளிதாக வென்றுவிடலாம் என்பதாகும். அந்த காரணம் எவ்வளவு சரியானது, நியாயமானது என்பதும் இப்போது நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. ஆக தமிழ்நாட்டு உரிமைக்கு மாநில உரிமைக்கு தமிழர்கள் உரிமைக்கு கிடைத்த ஒரு மகத்தான வெற்றி. நவம்பர் 11, 2022 தமிழ்நாட்டின் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நாள்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரும்புங்கள்” என்று கோரிக்கை வைக்க என்ன யோக்கியதை உள்ளது என்பதும் நம்முடைய கேள்வியாக இருக்கிறது.

கிறித்தவ இஸ்லாமிய மதங்களில் இந்து மதம் அளவுக்கு தீண்டாமையோ ஜாதி கொடுமைகளோ மிக அதிகமாக இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் கூட, “பரிசுத்தமான மதங்கள்” என்றோ “ஜாதி வேற்றுமை துளியும் இல்லை” என்றோ இவ்விரு மதங்களுக்கும் நற்சான்றிதழ் அளிக்க முடியாது. Biggest caste survey என்ற பெயரில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில், 2014 ஆம் ஆண்டு நவம்பர் 29இல், தீண்டாமை குறித்த ஒரு கணக்கெடுப்பு ஆய்வறிக்கை வெளிவந்துள்ளது.

உங்கள் வீட்டு சமையலறையில் பட்டியல் ஜாதியினரை (SC) நுழைய அனுமதிப்பீர்களா? என்ற கேள்விக்கு, மக்கள் அளித்த பதிலைக் கொண்டு புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

ஒரு பட்டியல் சமூக நபரை சமையலறைக்குள் விடமாட்டோம் என்று இந்துக்களில் 35% பேரும், சமணர்களில் 30% பேரும், சீக்கியர்களில் 23% பேரும், இஸ்லாமியர்களில் 18% பேரும், கிறித்தவர்களில் 5% பேரும், பழங்குடி மதத்தினரில் 5% பேரும், புத்த மதத்தில் 1% பேரும் கூறியுள்ளனர். எனவே, முறையாக புள்ளிவிவரங்களை சேகரித்து, பாதிப்புக்கு தகுந்தபடி, எந்தெந்த மதங்களுக்கு மாறிய பட்டியல் இனத்தவர்களை எந்தெந்த பிரிவுகளில் சேர்த்தால் அவர்களுக்கான நிவர்த்தி கிடைக்குமோ, அந்தந்த பிரிவுகளில் சேர்த்து, அவர்களுக்கான சமூக நீதியை வழங்குவது தான் ஒரு அரசின் கடமையாக இருக்குமே தவிர, மக்களிடம் மதமோதலை தூண்டும் கருத்துக்களை விதைத்து கொண்டே, நீதிமன்றத்தில் நேர்மாறான கருத்துக்களை தெரிவிப்பது என்பது, ஒரு பொறுப்பான அரசின் செயல் அல்ல.

பாஜகவின் இந்த இரட்டை வேடத்தை பட்டியலின மக்கள் புரிந்து கொள்ளாமல் இல்லை.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பிரகலாதன் முதலாம் ஆண்டு நினைவு நாள்



திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு வடக்கு மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியம் குருவரெட்டியூரில் பெரியாரின் பெருந் தொண்டர் திராவிடர் கழக மண்டல செயலாளர் பிரகலாதன் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி தலைமை உரை நிகழ்த்தினார். கழகத்தின் அம்மா பேட்டை ஒன்றிய செயலாளர் வேல்முருகன் வரவேற்பு கூறினார்.

தொடர்ந்து ஈரோடு வடக்கு மாவட்டத்தின் பிரச்சார அணியின் செயலாளர் வேணுகோபால், மாநில செயற்குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், தமிழ் புலிகள் கட்சியின் மாவட்ட செயலாளர் வேங்கை பொன்னுசாமி, தமிழர் இன உணர்வாளர் கூட்டமைப்பின் சார்பாக பன்னீர்செல்வம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அம்மாபேட்டை ஒன்றிய பொறுப்பாளர் பெரியநாயகம், கழகத்தின் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகத்தின் வெளியீட்டுச் செயலாளர் இராம இளங்கோவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிறைவாக, கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரை யாற்றினார். நிகழ்வில் கலந்து கொண்ட தோழமை அமைப்புகள் கட்சிகள் பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த கிருஷ்ணமூர்த்தி, திராவிடர் கழகத்தின் குருவை நகரச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, தமிழர் இன உணர்வாளர் கூட்டமைப்பின் சார்பாக கோவிந்தராசு, பத்மநாதன் பிரகலாதன் குடும்பத்தினர் தோழர்கள், பொதுமக்கள், மாணவர்கள் என பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்வில், புரட்சிப் பெரியார் முழக்கம் சந்தாவாக கழகத் தலைவரிடமும் பொருளாளர் இடமும் 50 சந்தாவுக்கு உண்டான ரூ.15,000 ஆயிரம் வழங்கப்பட்டது. நிறைவாக திலீபன் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் குருவை பெரியார் படிப்பகத்தில் அசைவ உணவு வழங்கப்பட்டது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கிரீமிலேயர் வரம்பைக் காட்டிலும், பொருளா தாரத்தில் பின் தங்கியோருக்கான 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டை பெறுவதற்கான வருமான வரம்பு அதிகம். பொருளாதார ரீதியாக ஏழையாக இருந்தாலும் உயர் ஜாதியினருக்கு மட்டுமே இந்த இட ஒதுக்கீடு பொருந்தும், மற்ற சமூகங்களுக்கு இதில் இடஒதுக்கீடு கிடையாது. எப்போதும் இட ஒதுக்கீடு என்றாலே தகுதி, திறமை என்று பேசும் கூட்டம், பாரதிய ஜனதா அரசு 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டை கொண்டுவரும் போது மட்டும் அதைப்பற்றி எதுவும் பேசவில்லை. எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு இட ஒதுக்கீடு கொடுக்கும்போது மட்டும் தகுதி, திறமையை பற்றிய கேள்விகள் தவறாமல் எழுகின்றன. இந்த மோசடியை காங்கிரஸ் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளே எதிர்க்காதது ஆச்சர்யத்தை தருகிறது.

கடந்த 27 ஆண்டுகளில், மாநில அரசு அல்லது பொதுத்துறை நிறுவனங்களின் எந்த ஒரு திட்டத்திலும், அதிகாரிகள் பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்க முடியவில்லை. ஏறக்குறைய ஒவ்வொரு நடவடிக்கையும் நீதிமன்றத்தால் எதிர்க்கப்பட்டது மற்றும் அந்தந்த மாநில அரசுகள் செய்த திருத்தங்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

நீதித்துறையில் பெண்கள், சிறுபான்மையினர், எஸ்.சி, எஸ்.டி. மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு போதுமான பிரதிநிதித்துவம் இல்லை. அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு 72 ஆண்டுகள் ஆகியும் உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் அனைத்து பிரிவினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. நீதித்துறையின் உயரிய பொறுப்புகள் உயர் ஜாதியினரின் ஆதிக்கத்தில்தான் உள்ளது. இந்த பின்னணியில் தான், செண்பகம் துரைராஜன் வழக்கில் 72 ஆண்டுகளுக்கு முன்பு ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீட்டை ரத்து செய்த நீதிமன்றம், இப்போது 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டை முற்றிலும் உயர் ஜாதியினருக்கு வழங்கும் சட்டத்திருத்தத்தை சரி என கூறியிருப்பதையும் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. இது அரசியலமைப்புச் சட்டத்தில் நிகழ்த்தப்பட்ட ஒரு தெளிவான மோசடியாகும்.

**தமிழில் பிரகாசு**

# பொழிலன் எழுதிய திருக்குறள் ஒப்பாய்வு: கழகத் தலைவர் உரை





பொழிலன் எழுதியுள்ள "திருக்குறள் ஒப்பாய்வுரை" (அறத்துப்பால்) நூல் அறிமுக நிகழ்ச்சி - 3, பாளையங்கோட்டை, சமாதானபுரம், ஏ.டி.எம்.எஸ். அரங்கில் 11.11.2022 அன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி திருக்குறள் ஒப்பாய் உரை நூல் குறித்து கருத்துரையாற்றினார்.

இந்நிகழ்வில் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும் தோழர் களும் கலந்து கொண்டு கருத்துரை வாழ்த்துரை வழங்கினார்கள்.

## 'மாவீரர் நாளில்' கழகத் தலைவர் நூல் விற்பனை




கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுதிய 'பெரியாருக்கு எதிராக முனை மழுங்கும் வாதங்கள்' என்ற புத்தகம் நன்செய் பதிப்பகத்தின் சார்பில் மக்கள் பதிப்பாக, 80 பக்கங்கள், 40 ரூபாய் விலையில் வரவுள்ளது. நூலின் வெளியீடு நவம்பர் 27 மாவீரர் நாளில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ள நாடாளு மன்ற உறுப்பினர், விசிக தலைவர் திருமாவளவன் அவர்களால் வெளியிடப்படவுள்ளது.

அன்று விற்பனையாகும் புத்தகங்களுக்கான தொகை முழுவதும் 'புரட்சிப் பெரியார் முழக்க'த்திற்கு நன்கொடையாக வழங்கப்பட வுள்ளது என்று 'நன்செய் பதிப்பகம்' சார்பாக கவிஞர் தம்பி அறிவித்துள்ளார்.

'அறிவுச்சுடர் பதிப்பகம்' நடத்தி வரும் திருச்சி அரசெழிலன், கழகத் தலைவரின் பிறந்தநாளை ஒட்டி 500 புத்தகங்களுக்கான செலவை ஏற்றுக் கொண்டுள்ளார். தலைவர்களின் பிறந்த நாளைக் கொண்டாட நினைக்கிற தோழர்கள் இதேபோல வேறு ஏதாவது சிறு நூல்களை வெளியிட்டு கொள்கை பரப்பலாம் என்கிறார் தோழர் அரசெழிலன்.

**பேராசிரியர் வீ. அரசு – வள்ளலார் குறித்தான ஆய்வுரை – சென்ற இதழின் தொடர்ச்சி அடுத்த இதழில் நிறைவடையும்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.300
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41. ✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 17th November 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN